# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 19 வெள்ளிக்கிழமை 05.12.2025 | கதிர் 390



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel




## 13 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை



கொழும்பு, டிச. 05

நாட்டில் 13 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பதுளை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, குருநாகல், கேகாலை, மொனராகலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை 24 மணித்தியாலங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் வெளியிட்டுள்ள பிந்திய அறிக்கையிலேயே மண்சரிவு தொடர்பாக இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் பிரகாரம், கண்டி, குருநாகல், கேகாலை மற்றும் மாத்தளை, மாவட்டங்களுக்கு மூன்றாம் நிலை சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பதுளை, நுவரெலிய மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கு இரண்டாம் நிலை செம்மஞ்சள் எச்சரிக்கையும், கொழும்பு, காலி, கம்பஹா, களுத்துறை, மாத்தறை மற்றும் மொனராகலை

7

# டித்வா சூறாவளி பலி எண்ணிக்கை 800 ஐத் தாண்டும்!

## மாயமானவர்கள் உயிரிழந்திருக்கலாம்



கொழும்பு, டிச. 05

இலங்கையில் டித்வா சூறாவளி காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 800 ஐத் தாண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி 486 பேர் உயிரிழந்துள்ளதுடன், 341 பேர் காணாமல் போயுள்ளனர்.

காணாமல் போனவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. மாயமானவர்கள் உயிரிழந்திருக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ள நிலையில் பலி எண்ணிக்கை 800 ஐத் தாண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

7

## “தையிட்டி விகாரை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த நீதியும் இதுவரை கிடைக்கவில்லை” – அருட்தந்தை சத்திவேல்!



தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமது ஒரு வருட ஆட்சியை கொண்டாடி முடித்திருக்கும் நிலையில் தையிட்டி விகாரை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த நீதியும் இதுவரை கிட்டவில்லை என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

இன்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தையிட்டி திஸ்ச விகாரை என்பது நாட்டின் சட்டத்திற்கு எதிராகவும் பௌத்த தர்மத்திற்கு எதிராகவும் சிங்கள பௌத்த ஆதிக்க மன நிலையில் நின்று கட்டப்பட்ட சட்டவிரோத கட்டடமாகும். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக மக்கள் அறவழியில் போராட்டம் நடாத்தி வரும் சூழ்நிலையில் நேற்றைய தினம் போராட்டத்தின் போது பொலிஸாரின் அராஜகம் சிங்கள பௌத்த அடக்குமுறை என்பதை ஆணித்தரமாக கூறுவதோடு இதனை வன்மையாக கண்டிக்கின்றோம்.

இனவாதம், மதவாதம் என்பவற்றிற்கு எதிரான அரசாங்கமாக தம்மை கூறிக் கொள்ளும் தற்போதைய அரசாங்கம் பொலிஸாரின் அடவாடி தனத்திற்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுத்து அராஜகத்தில் ஈடுபாட்டோருக்கு தண்டனை பெற்றுக் கொடுப்பதோடு விகாரை விடயத்தில் நீதியை நிலை நாட்ட வேண்டும் எனவும் கேட்கின்றோம்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமது ஒரு வருட ஆட்சியை கொண்டாடி

7

## வெள்ளப்பேரிடரால் உயிரிழந்தவர்களுக்கு வவுனியா பூந்தோட்டம் பகுதியில் அஞ்சலி




இலங்கையில் ஏற்பட்ட வெள்ளப்பேரிடரால் உயிரிழந்த பொதுமக்களுக்கு வவுனியா - பூந்தோட்டம் பகுதியில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

பூந்தோட்டம் வர்த்தகர் சங்கம், சமூகநீதிக்கான வெகுஜன

7

## ஜனாதிபதி பாராளுமன்றில் விசேட உரை



வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்னும் சிறிது நேரத்தில் நடைபெறவுள்ள நிலையில், பாராளுமன்றத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க பாராளுமன்றில் விசேட உரை ஒன்றை ஆற்றி வருகிறார்.

வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதம் இன்று இறுதி நாளாக நடைபெற்றது.

7

## வெளிநாடு வாழ் இலங்கையர்களிடமிருந்து ‘Rebuilding SriLanka’ நிதியத்திற்கு மில்லியன் கணக்கான நிதி!

கொழும்பு, டிசெ.5

வெளிநாடு வாழ் இலங்கையர்களிடமிருந்து ‘சுநடிரடைனலைபெ ளுசடைடியமெய’ நிதியத்திற்கு இதுவரை 635 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை கிடைத்துள்ளதாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் குறிப்பிடுகையில்,

இலங்கை வங்கியின் கீழ் இயங்கும் கணக்கின் ஊடாக இதுவரை 30,470க்கும் மேற்பட்ட வைப்புக்கள் **(transaction)** இடம்பெற்றுள்ளதாக கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும குறிப்பிட்டார்.

அத்துடன், இலங்கை மத்திய வங்கியின் கீழ் இயங்கும் வெளிநாட்டு நாணயத்தில் வைப்பிலிடக்கூடிய கணக்குகள் ஊடாக இந்த நிதியத்திற்கு சுமார் 61 மில்லியன் ரூபா கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

33 நாடுகளிலிருந்து உரிய கணக்குகளுக்கு இந்தப் பணம் கிடைத்துள்ளது.

அதற்கமைய, ‘சுநடிரடைனலைபெ ளுசடைடியமெய’ நிதியத்திற்கு சுமார் 700 மில்லியன் ரூபா கிடைத்துள்ளதாக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் அறிவித்துள்ளதாக சூரியப்பெரும மேலும் தெரிவித்தார்.

கடந்த 02ஆம் திகதி வரையில் 19,000க்கும் மேற்பட்ட வெளிநாடு வாழ் இலங்கையர்கள் பணத்தை வைப்பிலிட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நீர்ப்பாசனத் துறையை மீளக்கட்டியெழுப்புமாறு பணிப்புரை



கொழும்பு, டிசெ.5

கமத்தொழில், கால்நடை வளங்கள் மற்றும் நீர்ப்பாசனத் துறைக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் மற்றும் அவற்றை மீளக் கட்டியெழுப்ப எடுக்க வேண்டிய துரித நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கான கலந்துரையாடல், நேற்று (04) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் விவசாய அமைச்சு மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளின் பங்கேற்புடன் நடைபெற்றது.

நாட்டை பாதித்த சீரற்ற காலநிலை காரணமாக நெல், சோளம், தானியங்கள் மற்றும் மரக்கறி பயிர்ச் செய்கைகளுக்கு ஏற்பட்டுள்ள சேதம் தொடர்பில் கிடைத்துள்ள தரவுகள் மற்றும் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீடு வழங்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

கால்நடைகள் மற்றும் நீர்ப்பாசனத் துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டதுடன், நீர்ப்பாசனக் கட்டமைக்கு ஏற்பட்டுள்ள சேதங்களை மதிப்பிட்டு, அவற்றை விரைவில் மீளக்கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்கான வேலைத்திட்டங்களைத் தயாரிக்குமாறும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால் காந்த, கமத்தொழில், கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன, காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் அரவிந்த செனரத், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் கபில ஜனக பண்டார, கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் டி.பி. விக்ரமசிங்க, விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ.ஏ.ஆர்.டி. விக்ரமராச்சி, நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கித்சிறி வெலிகெபொல, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி கே.கே. சரத் உள்ளிட்ட அரச அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ)



# கைத்தொழில் அமைச்சு அதிகாரிகளுடன் ஜனாதிபதி சந்திப்பு



கைத்தொழில் துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து ஆராய்வதற்கான கலந்துரையாடல் நேற்று (04) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கும் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெற்றது.

அனர்த்தம் காரணமாக கைத்தொழில்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்த புள்ளிவிவரங்களை அதிகாரிகள் இதன்போது சமர்ப்பித்ததுடன், கைத்தொழில் துறையை மீட்டெடுப்பதற்கான பரிந்துரைகளும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

இந்த சந்தர்ப்பத்தில், கைத்தொழில் துறையினருக்கு வழங்கக்கூடிய நிவாரணங்கள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டன(ஐ)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடமாடும் மருத்துவக் குழுக்கள்!



பேரிடர் காரணமாக இடம்பெயர்ந்த அல்லது கிராமங்களில் சிக்கித் தவிக்கும் மக்களின் சுகாதார நிலைமையை ஆராய்வதற்கு நடமாடும் வைத்தியக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தொற்று நோயற்ற நோய்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த குழுக்கள் தேவையான மருந்துகளையும் வழங்கவுள்ளதாக சுகாதார பிரதி அமைச்சர் பேராசிரியர் ஹன்சக விஜேமுனி தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களுக்காக வைத்திய சேவைகளை வழங்குவதற்கு தானாக முன்வரும் வைத்தியர்கள் உள்ளிட்ட குழுக்கள் அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான இடத்தைப் பெற மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தை தொடர்பு கொள்ள வேண்டும் என்று பிரதி அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

இதற்கிடையில் எலிக்காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான மருந்துகள் ஒவ்வொரு பொதுச் சுகாதார உத்தியோகத்தரிடம் வழங்கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி மேலும் தெரிவித்தார். (ஐ)

## நெடுந்தீவு கடலில் 16,000,000 வெளிநாட்டு சிகரெட்டுகளை கைப்பற்றிய கடற்படை!



யாழ்ப்பாணம், நெடுந்தீவுக்கு தெற்கே உள்ள கடல் பகுதியில் 2025 டிசம்பர் 03 ஆம் திகதி இலங்கை கடற்படை நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் மூலம், சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வர முயன்ற சுமார் ஒரு லட்சத்து அறுபதாயிரம் (160,000) வெளிநாட்டு சிகரெட்டுகள், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் கைக்கடிகாரங்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டது.

அதன்படி, வடக்கு கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல்வசப நிறுவனத்தினால் நெடுந்தீவுக்கு தெற்கே உள்ள கடல் பகுதியில் நடத்திய இந்த சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, கடல் பகுதியில் கைவிடப்பட்டிருந்த 09 சந்தேகத்திற்கிடமான பைகள் பரிசோதிக்கப்பட்டன.

அங்கு, சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வர முயன்ற சுமார் ஒரு லட்சத்து அறுபதாயிரம் (160,000) வெளிநாட்டு சிகரெட்டுகள், 150 அழகுசாதன கிரீம்கள், லோஷன்கள் மற்றும் 10 கைக்கடிகாரங்கள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன. கடற்படை நடவடிக்கைகளின் காரணமாக கரைக்கு கொண்டு வர முடியாததால், நெடுந்தீவுக்கு தெற்கே உள்ள கடல் பகுதியில் கடத்தல்காரர்களால் கைவிடப்பட்டதாக நம்பப்படும் வெளிநாட்டு சிகரெட்டுகள், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் கைக்கடிகாரங்கள் அடங்கிய இந்த தொகுதியை கடற்படை கைப்பற்றியதுடன், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. (ஐ)

## மேல் மாகாண கழிவுகளை 3 வாரங்களில் அகற்ற வேண்டும்



கொழும்பு, டிசெ.5

மேல் மாகாண கழிவு முகாமைத்துவக் குழுக் கூட்டம் பிரதமர் அலுவலகத்தில் இன்று (04) பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, அனர்த்த நிலைமை காரணமாக குவிந்துள்ள கழிவுகளை முறையான வகையில் அகற்றி, துப்புரவு பணிகளை மூன்று வாரங்களுக்குள் நிறைவு செய்ய வேண்டும் என பிரதமர் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் சேரும் கழிவுகளை விரைவாக அகற்றுவதற்காக காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கெரவலப்பிட்டியவில் உள்ள காணியிலிருந்து ஐந்து ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளதால், அதற்கமைய தற்போது சேரும் கழிவுகளை எவ்வித சிக்கலுமின்றி அகற்ற முடியும் என குழு தீர்மானித்தது. அக்காணியில் சேகரிக்கப்படும் கழிவுகளை முறையாக அகற்றுவதற்கும் அங்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன. (ஐ)

# அனர்த்தத்தினால் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட பாதிப்பைக் குறைக்க தயாரான IMF




நாடு முழுவதும் உயிர்களைப் பலிகொண்டு, ஆயிரக்கணக்கானோரை இடம்பெயரச் செய்த அழிவுகரமான புயல் மற்றும் வெள்ள நிலைமையினால் நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட பாதிப்பைக் குறைப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் (ஐஆகு) தயாராக உள்ளது.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவிக்கும் போதே ஐஆகு இன் தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜூலி கோசேக் இதனைத் தெரிவித்தார்.

அனர்த்தத்தின் மனிதாபிமான, சமூக மற்றும் பொருளாதார தாக்கங்களை மதிப்பிடுவதற்கு இலங்கை அதிகாரிகள், அபிவிருத்தி பங்காளிகள் மற்றும் ஏனைய சகாக்களுடன் நெருக்கமாக செயற்படுவதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

"புயலினால் இலங்கையின் பல பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில் மனித உயிரிழப்புகளுக்கு மேலதிகமாக பொருளாதார நடவடிக்கைகளிலும் இது மோசமான பாதிப்பை ஏற்படுத்தும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்" என அவர் அங்கு குறிப்பிட்டார்.

இலங்கை தற்போது அதன் பங்காளிகளுடன் இணைந்து உடனடி அனர்த்தத்திற்குப் பிந்திய சேத மதிப்பீட்டை மேற்கொண்டு வருகிறது.

இந்த மதிப்பீடு நிறைவடைந்த பின்னர் பொருளாதார தாக்கங்கள் குறித்த தெளிவு கிடைக்கும் என அவர் கூறுகிறார்.

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் விஸ்தரிக்கப்பட்ட நிதி வசதி (நுகுகு) தொடர்பில் உறுதிப்படுத்திய கோசேக், நாட்டின் மறுசீரமைப்பு முயற்சிகளுக்கு ஆதரவளிக்க ஐஆகு அர்ப்பணிப்புடன் உள்ளதாகத் தெரிவித்தார்.

"நுகுகு ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையின் மீட்சி, மறுசீரமைப்பு மற்றும் தாங்கும் திறன் ஆகியவற்றுக்கு நாங்கள் தொடர்ச்சியாக ஆதரவளிப்போம்" எனவும் அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

புயலுக்கு முன்னதாக கடந்த ஒக்டோபர் மாதம் ஐந்தாவது மீளாய்வு தொடர்பில் இலங்கை அதிகாரிகளும் ஐஆகு பணியாளர்களும் ஏற்கனவே பணியாளர் மட்ட இணக்கப்பாட்டை எட்டியுள்ளதாக அவர் வலியுறுத்தினார்.

அத்துடன் "மீட்புச் செயல்பாட்டில் இலங்கைக்கு மேலும் உதவுவதற்கான மாற்றீடுகளை ஐஆகு பணியாளர்கள் தற்போது ஆராய்ந்து வருவதாகவும்", டிசம்பர் 15 ஆம் திகதி ஐஆகு பணிப்பாளர் சபை கூட்டத்தை நடத்த எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

பொருளாதாரத் தேவைகள் மற்றும் சேதங்கள் குறித்த மேலதிக தகவல்கள் எம்மிடம் உள்ளதால், அத்தகவல்கள் இலங்கைக்கு மேலும் உதவக்கூடிய விதம் குறித்து எடுக்கப்படும் இறுதித் தீர்மானங்களுக்கு காரணமாக அமையலாம் எனவும் ஜூலி கோசேக் மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடக சந்திப்பில், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கும், இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளின் மக்களுக்கும் அவர் தனது அனுதாபத்தைத் தெரிவித்தார் .(ஐ)

# நீதிமன்றம் மீண்டும் உத்தரவிட்டும் தி.மு.க., அரசு பிடிவாதம்! தீபம் ஏற்றாததால் திருப்பரங்குன்றத்தில் தீராத பதற்றம்



மதுரை திருப்பரங்குன்றம் மலை உச்சி தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என உயர்நீதிமன்றம் மதுரை கிளை மீண்டும் உத்தரவிட்டதை நேற்றும் அமல்படுத் தாமல் தி.மு.க., அரசு பிடிவாதம் காட்டியது. இதனால் திருப்பரங்குன்றத்தில் தீராத பதற்றம் நீடிக்கிறது.

திருக்கார்த்திகையை முன்னிட்டு சுப்பிரமணியசுவாமி கோயில் சார்பில் மலையில் உள்ள உச்சிபிள்ளையார் கோயில் அருகில் உள்ள வழக்கமான இடத்தில் தீபம் ஏற்றப்பட்டது. அதேசமயம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில்தான் முறையாக தீபம் ஏற்றவேண்டும் எனவும், அதனை அமல்படுத்த உத்தரவிடக்கோரியும் ஹிந்து தமிழர் கட்சி நிறுவனர் ராம ரவிக்குமார், ஹிந்து மக்கள் கட்சி மாவட்ட தலைவர் சோலைகண்ணன், ஹிந்து முன்னணி சட்டப்பிரிவு செயலாளர் பரமசிவம் உள்ளிட்டோர் உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் மனு செய்திருந்தனர்.

விசாரித்த நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன், திருப்பரங்குன்றம் மலை உச்சி வரை நேரில் சென்று ஆய்வு செய்து, 'தீபம் ஏற்றலாம்' என உத்தரவிட்டார்.

இதை எதிர்பார்க்காத அறநிலையத்துறை, உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்தது. இம்மனு ஏற்கப்படாத நிலையில், நீதிமன்ற உத்தரவை மதிக்கவில்லை எனக்கூறி நேற்றுமுன்தினம் மாலை ராம ரவிக் குமார் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்தார். விசாரித்த நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன், மனுதாரரான ரவிக்குமார் உட்பட 10 பேர் மத்திய தொழிலக பாதுகாப்பு படை வீரர்கள் பாதுகாப்புடன் மலைக்கு சென்று தீபம் ஏற்ற உத்தரவிட்டார்.

இதைதொடர்ந்து மலைக்கு செல்ல முயன்றவர்களை போலீசார் தடுத்ததால் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. சில போலீசாருக்கு காயம் ஏற்பட்டது. நீதிமன்ற உத்தரவை அமல்படுத்துவதை தடுக்க திருப்பரங்குன்றத்தில் அவசரம் அவசரமாக 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதை காரணம் காட்டி பாதுகாப்பு படை வீரர்களை போலீசார் தடுத்தனர்.

மனுதாரர் ரவிக்குமார் தலைமையில் ஹிந்து அமைப்பினர் போலீஸ் கமிஷனர் லோகநாதனிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால் அரசின் கொள்கை முடிவால் கமிஷனர் அனுமதி மறுத்ததால் பதட்டமான சூழல் ஏற்பட்டது. சட்டம் ஒழுங்கு பிரச்னை ஏற்படுவதை தவிர்க்க மலை பாதை முன் சாலையில் கார்த்திகை தீபத்தை ஏற்றிவிட்டு ராம ரவிக்குமார் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலைந்து சென்றனர்.

இரண்டாம் நாளான நேற்று உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனின் உத்தரவை எதிர்த்து நீதிபதிகள் ஜெயச்சந்திரன், ராமகிருஷ்ணன் அமர்வில் தமிழக அரசு அப்பீல் செய்தது. முதல் வழக்காக விசாரித்த அமர்வு, தனி நீதிபதியின் உத்தரவை உறுதி செய்து உத்தரவிட்டதோடு, நீதிமன்ற உத்தரவை மதிக்காத அதிகாரிகள் மீதான அவமதிப்பு வழக்கை ஜி.ஆர். சுவாமிநாதனே விசாரிப்பார் என உத்தரவிட்டது.

இதைதொடர்ந்து அவமதிப்பு வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன், காணொலியில் கலெக்டர் பிரவீன்குமார், கமிஷனர் லோகநாதனிடம் விசாரித்தார். அவர்களின் பதில்கள் ஏற்கும்படியாக இல்லாததால், இன்றிரவு (நேற்று) 7:00 மணிக்குள் மனுதாரர்(ராம ரவிகுமார்) தீபம் ஏற்ற வேண்டும். அவருக்கு கமிஷனர் லோகநாதன் பாதுகாப்பு அளிக்க வேண்டும். தீபம் ஏற்றியது குறித்து நாளை(இன்று) காலை 10:30 மணிக்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். திருப்பரங்குன்றத்தில் 144 தடை உத்தரவு ரத்து செய்யப்படுகிறது' என உத்தரவிட்டார்.

இதை கேள்விபட்ட ஹிந்து அமைப்பினரும், பக்தர்களும் மதுரை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பட்டாசு வெடித்து கொண்டாடினர். திருப்பரங்குன்றத்திலும் தீபம் ஏற்றுவதை காண குவிந்தனர். ராம ரவிக்குமார், பா.ஜ., மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் மலைக்கு செல்ல தயாரான போது, '144 தடை உத்தரவை நீதிபதி ரத்து செய்ததை எதிர்த்து மேல் முறையீடு செய்ய உள்ளதால் அனுமதிக்க முடியாது' என கமிஷனர் லோகநாதன் அறிவித்தார். இதனால் மீண்டும் பதற்றம் உருவானது.

இரவு 8:00 மணி வரை பேச்சுவார்த்தை நடந்தது. இச்சூழலில் 144 தடை உத்தரவை மீறி கூட்டம் கூடியதாக நயினார் நாகேந்திரன், எச்.ராஜா, திருமுருகன், முருகன்ஜி உள்ளிட்டோரை போலீசார் கைது செய்தனர். தி.மு.க, அரசின் தொடர் பிடிவாதத்தால் திருப்பரங்குன்றத்தில் தொடர் பதற்றம் நீடிக்கிறது. இதற்கிடையே இருநீதிபதி அமர்வு அளித்த உத்தரவுக்கு எதிராக நேற்றிரவு உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு அவசர அவசரமாக மேல்முறையீடு செய்தது.

ஹிந்து தமிழர் கட்சி தலைவர் ராமரவிக்குமார்: திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபமேற்ற உயர்நீதி மன்றம் 3 முறை உத்தரவிட்டுள்ளது. இன்றைய(நேற்று) உத்தரவில் மனுதாரருக்கு மதுரை போலீஸ் கமிஷனர் பாதுகாப்பு அளித்து செல்ல வேண்டும் எனவும் உத்தரவில் தெரிவிக்கப்பட்டது.

ஒரு மணி நேரமாக நாங்கள் இங்கு நின்று கொண்டிருக்கிறோம். ஆனால் போலீஸ் கமிஷனர் இங்குவரவில்லை. இது நீதிமன்ற அவமதிப்பாகும். தமிழக அரசு ஹிந்துக்களையும், ஹிந்துக்களின் உணர்வையும் மதிக்கவில்லை. திருப்பரங்குன்றம் எந்தப் பிரச்னையும் இல்லாத அமைதியான ஊர். இங்கு கலவரத்தை ஏற்படுத்தும் நோக்குடன் தமிழக அரசு, போலீசாரின் நடவடிக்கை உள்ளது. நாங்கள் மீண்டும் நீதிமன்றத்தை நாடுவோம்.

ராம ரவிகுமார் தரப்பு வழக்கறிஞர் அருண் சுவாமிநாதன்: திருப்பரங்குன்றம் தொடர்பாக நீதிமன்றத்தில் அரசின் மேல்முறையீடு தள்ளுபடியாகி விட்டது. அதன்பின்னும் இரவு 8:30 மணி வரை நீதிமன்ற உத்தரவை போலீசார் மதிக்கவில்லை. மாலை 4:30 மணிக்கு நீதிமன்றம் அளித்த மற்றொரு உத்தரவையும் மதிக்கவில்லை. இரண்டாவது நாளாகவும் தீபம் ஏற்ற வேண்டும் என்ற நீதிமன்ற உத்தரவை திட்டமிட்டே தமிழக அரசு மறுத்துள்ளது. இது ஹிந்துக்களின் வழிபாட்டு உரிமையை தடுக்கும் நோக்குடன் தமிழக அரசு, நீதிமன்ற உத்தரவை கொஞ்சமும் மதிக்கவில்லை.

நீதிமன்றம்தான் தமிழகத்தின் உயர்ந்த பட்ச அமைப்பு. அடுத்து டில்லிதான். நீதிமன்ற உத்தரவை, குறிப்பாக மதுரை போலீசார் மதிக்கவில்லை. 144 அமலில் இருப்பதாக கூறுகின்றனர். ஆனால் திருப்பரங்குன்றத்தில் இயல்பான நிலையே உள்ளது. எந்த பிரச்னையும் இல்லை. அசாதாரணமான ஒரு சூழலை உருவாக்கி சட்டம் ஒழுங்கு பிரச்னையை ஏற்படுத்தும் வகையில் இவ்விவகாரத்தில் போலீசார் செயல்படுகின்றனர். திருப்பரங்குன்றத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்னையை அரசே உருவாக்குகிறது. நாங்கள் நீதிமன்றத்தையே நம்பியுள்ளோம்.

போலீஸ் கமிஷனரோடு தீபம் ஏற்ற செல்ல வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் 100 மீட்டர் தொலைவில்தான் கமிஷனர் இருக்கிறார். நாங்கள் வந்து ஒன்றரை மணிநேரம் ஆனபின்பும், கமிஷனர் வரவில்லை. இது தவறான ஒரு முன்னுதாரணம். மற்ற மாநிலங்களிலும் இதேநிலையை பின்பற்றினால் நீதித்துறை என்பதே கேள்விக்குறியாகும். இவ்வாறு அவர் கூறினார்.

உயர்நீதிமன்றம் மூன்றாவது முறையாக உத்தரவிட்டும், தீபம் ஏற்றப்படாமல் அனைவரும் இரவு 9:00 மணி அளவில் ஏமாற்றத்துடன் கலைந்து சென்றனர்.

மனுதாரரான ராம ரவிக்குமார், 'நீதிமன்றம் உத்தரவுபடி போலீஸ் கமிஷனர் பாதுகாப்புடன் மலைக்கு செல்ல வேண்டும் என்பதால் அவருக்காக காத்து கொண்டிருக்கிறேன்' என இரவு 9:00 மணி வரை மலைப்பாதை அருகே காத்திருந்தார். ராம ரவிக்குமார் இருக்கும் இடத்திற்கு வந்தால் நீதிமன்ற உத்தரவு காரணமாக அவரை மலைக்கு அழைத்துச்செல்ல வேண்டியிருக்குமே என அவர் பக்கம் வருவதை கமிஷனர் லோகநாதன் தவிர்த்து வேறு பகுதியில் நின்றுகொண்டிருந்தார். மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் அடி என்பது போல், ஒருபுறம் தி.மு.க., அரசின் பிடிவாதம், மறுபுறம் நீதிமன்றம் உத்தரவை செயல்படுத்த முடியாத இக்கட்டான நிலை என இருதரப்பையும் சமாளிக்க முடியாமல் போலீசார் படும்பாட்டை பார்ப்பதற்கு பரிதாபமாக இருக்கிறது.

இந்நிலையில் இன்று டிச.,5 காலை நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி சுவாமிநாதன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. சுப்ரீம் கோர்ட்டில் மேல் முறையீடு செய்துள்ளதாக அரசு தரப்பில் தெரிவித்த நிலையில் வழக்கை டிச.,9க்கு ஒத்தி வைத்தார் நீதிபதி சுவாமிநாதன். (ஐ)

# யாருடன் கூட்டணி ஒரே நேரத்தில் திமுக -தவெகவுடன் பேச்சு நடத்தும் காங்கிரஸ்



திமுகவுடன் தொகுதி பங்கீடு தொடர்பாக காங்கிரஸ் குழு பேச்சுவார்த்தை நடத்தி வரும் நிலையில், அக்கட்சியின் முக்கிய நிர்வாகி தவெக தலைவர் விஜயை சந்தித்து பேசியது தமிழக அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழக சட்டசபைக்கு அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ளது. விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தின் வருகையால், தமிழகத்தில் 4 முனை போட்டி ஏற்பட்டுள்ளது. தன் கூட்டணிக்கு கட்சிகளை இழுப்பதற்காக, கூட்டணி ஆட்சி என்றும் விஜய் அறிவித்துள்ளார்.

தேர்தலுக்கு இன்னும் சில மாதமே இருக்கும் வேளையில், பிரசாரம், தொகுதி பங்கீடு குறித்த பேச்சுவார்த்தைகளை கட்சியினர் தொடங்கி விட்டனர். அந்த வகையில், முதல் ஆளாக, திமுகவுடன் தொகுதி பங்கீடு குறித்து பேச்சு நடத்த 5 பேர் கொண்ட குழுவை, காங்கிஸ் தலைமை அறிவித்துள்ளது.

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, சூரஜ், எம்.என்.ஹெக்டே, நிவேதிக் ஆல்வா, ராஜேஷ் குமார் ஆகியோர் அடங்கிய இந்தக் குழு, கடந்த டிச.,03ம் தேதி முதல்வர் ஸ்டாலினை சந்தித்து பேச்சு நடத்தினர்.

இந்த நிலையில், காங்கிரஸ் கட்சியின் முக்கிய நிர்வாகியும், ராகுலுக்கு நெருக்கமான தலைவராக அறியப்படும் பிரவீன் சக்கரவர்த்தி, தவெக தலைவர் விஜயை சந்தித்து பேசியுள்ளார்.

2026 சட்டசபை தேர்தலில் கூட்டணி அமைப்பது தொடர்பாக இந்த சந்திப்பு இருக்கலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. திமுகவுடனான பேரத்தை அதிகரிப்பதற்காக, காங்கிரஸ் தலைமை திட்டமிட்டு இந்த சந்திப்பை நடத்தியிருக்கலாம்.

ஆனால், தவெகவுடன் காங்கிரஸ் கட்சியின் முக்கிய நிர்வாகியின் சந்திப்பை, திமுகவினர் எப்படி எடுத்துக் கொள்வர் என்பது போகப்போக தெரியும் என்கின்றனர், அரசியல் ஆர்வலர்கள்.

கடந்த 2016 சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் 41 இடங்களில் 8ல் மட்டுமே வெற்றி பெற்றது. இந்தத் தேர்தலில் திமுக ஆட்சியை பிடிக்காமல் போனதற்கு காங்கிரஸ் கட்சியின் தோல்வியும் ஒரு காரணமாக அமைந்தது. எனவே, காங்கிரசுக்கு கூடுதல் இடங்களை ஒதுக்குவதில் கவனமாக இருந்த திமுக, 2021ல் நடந்த சட்டசபை தேர்தலில் 25 இடங்களை மட்டுமே ஒதுக்கியது. அதில், 18ல் வெற்றி பெற்றது.

இந்த வெற்றி காங்கிரஸ் கட்சியினருக்கு திமுக கூட்டணியில் கூடுதல் இடங்களைப் பெற்று, போட்டியிட வேண்டும் என்ற ஆசையை தூண்டியுள்ளது. இதன் வெளிப்பாடாகவே, காங்கிரஸ் கட்சியினரின் கூட்டங்களில், கூடுதல் இடங்களைப் பெற வேண்டும் ஆட்சியில் பங்கு பெற வேண்டும் என்ற முழக்கங்கள் முன்வைக்கப்படுவது வாடிக்கையாக உள்ளது.

(ஐ)



# உங்களின் முதன்மையான உறவு எது?

உறவுகளில்மிக முக்கியமான உறவு எதுவாக இருக்கும்? முதன்மையான உறவு எந்த உறவாக இருக்கும்? அது யாருடனான உறவாக இருக்க முடியும்?

நம்மில் பெரும்பாலானவர்களின் பதில்கள் பெற்றோர்-பிள்ளைகள் அல்லது கணவன்- மனைவி என்ற பதிலாகத்தான் இருக்கும்.

ஆனால், முதன்மையான, முக்கியமான உறவு என்றால், அது கண்டிப்பாக நம்மைப் பற்றி முழுவதுமாக அறிந்த ஒரு நபர் உடனான உறவாகத்தானே இருக்க முடியும்? நம்மிடம் அதிக நேரம் செலவிட்ட ஒரு நபருடன் ஆன உறவாகத்தானே இருக்க





முடியும்? அந்த நபர் உங்களைப் பற்றிய ரகசியங்களை எல்லாம் அறிந்தவராகத்தானே இருக்க முடியும்?

அப்படியானால் அந்த நபர் யார்? அந்த உறவு எது?

உங்கள் வாழ்வில் அந்த நபர் நீங்கள்தான். அந்த முக்கியமான உறவு உங்களுக்கும் உங்களுக்குமான உறவுதான். ஏனென்றால் உங்களைப் பற்றி நன்றாகத் தெரிந்தவர், உங்கள் வாழ்வில் நடந்தவை குறித்து அனைத்தும் அறிந்தவர் நீங்கள்தாம். இதுவரை ஒரு நிமிடம்கூட இடைவெளி இல்லாமல் அதிக நேரம் செலவிட்டதும் உங்களிடம்தான்.

அந்த முக்கியமான உறவு, நமக்கும் நமக்குமான ஓர் உறவு எப்படி இருக்கிறது? அதைத் தெரிந்துகொள்வது எப்படி?

இப்போது உங்களிடம் ஒரு கேள்வி வைக்கிறேன். உங்கள் கடந்த காலம் எப்படி எல்லாம் இருந்திருந்தால் உங்களுக்குப் பிடிக்கும்?

கடந்த காலத்தைப் பற்றி யோசிக்கும்போது பொதுவாக எல்லாருக்கும் ஏதோ ஒரு குறை இருந்து கொண்டுதான் இருக்கும். ஒவ்வொருவரும் கடந்த காலத்தைப் பொறுத்தவரை நிறைய விமர்சனங்களை வைத்திருப்போம். அது நம் பெற்றோரைக் குறித்ததாக இருக்கலாம், குழந்தைப் பருவம் குறித்ததாக இருக்கலாம் அல்லது, நம் கல்லூரிப் பருவம் குறித்ததாக இருக்கலாம்.

உயர்ந்த பதவியில் பணிபுரிந்து வரும் என்னுடைய தோழி ஒருவரிடம் அவருடைய பெற்றோரைக் குறித்தோ அல்லது அவருடைய பள்ளிப்பருவம் குறித்தோ ஏதாவது கேட்டால் சரியாக பதில் சொல்ல மாட்டார். கோபமும் எரிச்சலும் வரும். உடனே அந்த தலைப்பை மாற்றி பேசுவார்.

ஒரு நாள் தன்னுடைய கடந்த காலம் குறித்து, இவ்வாறு பகிர்ந்து கொண்டார். “சிறுவயதில் வறுமையில் இருந்தேன். அப்பா ஒரு குடிகாரர். குடித்துவிட்டுச் சில நேரம் ரோட்டோரமாக விழுந்து கிடப்பார். என்னுடைய குழந்தைப் பருவம் மாதிரி வேறு யாருக்கும் அமையக் கூடாது”.

தான் விரும்பிய வாழ்க்கையை நல்லபடியாக அமைத்துக்கொண்டு மகிழ்ச்சியாகவே வாழ்ந்துவருகிறார். பெற்றோரைப் பற்றிக் கேட்பது என்பது ஓர் எளிமையான, சாதாரணமான கேள்வி. ஆனால், அவருக்கு ஏன் கோபமும் எரிச்சலும் வருகிறது?

ஏனென்றால், தன்னுடைய கடந்த காலத்தோடு தன்னை அடையாளப்படுத்திக்கொள்கிறார். அதுதான் தான் என நினைத்துக்கொள்கிறார்.

சில விஷயங்களில் நாமும் அப்படிதான். நம்முடைய கடந்த காலத்தோடு, கடந்தகால நிகழ்வுகளோடு நம்மை அடையாளப்படுத்திக்கொண்டிருக்கிறோம். சாதாரண காரியங்களுக்கு, கோபமும் எரிச்சலும் கொள்வோம். பிறரிடம் கடினமாகக்கூட நடந்துகொள்வோம். எளிமையான கேள்விக்கு எளிமையாக விடை அளிக்க முடிவதில்லை. ஏனென்றால், நம் பழைய அடையாளங்கள் பெரும்பாலும் எதிர்மறையானவை.

ஆனால், நீங்கள் உங்கள் கடந்த காலம் அல்ல. உங்கள் கடந்தகால அனுபவங்களும் அல்ல. அது கடந்து போன ஒன்று. அதை அப்படியே ஏற்றுக்கொள்ளலாம் இன்றும் இப்போதும். அதோடு நம்மை இணைத்துக்கொள்வதற்கும் அடையாளப்படுத்திக்கொள்வதற்கும் அவசியம் இல்லை.

ஆமாம் உண்மைதான், என் குழந்தைப் பருவம் நன்றாக இல்லை அதனால் என்ன?

உண்மைதான், எனது அப்பாவுக்குப் போதைப் பழக்கம் இருந்தது. அதனால் என்ன எனச் சொல்லி அதை ஏற்றுக்கொள்ளலாம்.

(7ஆம் பக்கம் பார்க்க..)

# உலகம் முழுவதும் அமைதியை நிலைநாட்டுகிறோம்




உலகம் முழுவதும் நாங்கள் அமைதியை நிலைநாட்டுகிறோம். இதுவரை யாரும் கண்டிராத அளவில் போர்களை நாங்கள் தீர்த்து வருகிறோம் என அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபராக டிரம்ப் பொறுப்பேற்ற நாளில் இருந்து போர்களை நிறுத்தி அமைதியை நிலை நாட்டுவதாக பலமுறை கூறி வருகிறார். அவர் அமைதிக்கான நோபல் பரிசு தர வேண்டும் என வெளிப்படையாக கேட்டு இருந்தார். ஆனால் அவருக்கு நடப்பாண்டிற்கான அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்கவில்லை. இருந்தாலும் அவர் போர்களை நிறுத்தியதாக கூறுவதை திரும்ப திரும்ப கூறி வருகிறார்.

இந்தசூழலில், வாஷிங்டனில் அமெரிக்காவின் உதவியுடன் காங்கோ மற்றும் ருவாண்டா நாடுகளுக்கு இடையே ஒரு அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது. பிறகு அமெரிக்க அதிபர் டிரம்ப் காங்கோ மற்றும் ருவாண்டா அரசுகளை பாராட்டினார். அப்போது அதிபர் டிரம்ப் கூறியதாவது: இது ஆப்பிரிக்காவிற்கு ஒரு சிறந்த நாள், உலகிற்கு ஒரு சிறந்த நாள். இன்று நாம் வெற்றி பெறுகிறோம். உலகம் முழுவதும் நாங்கள் அமைதியை நிலைநாட்டுகிறோம். இதுவரை யாரும் கண்டிராத அளவில் போர்களை நாங்கள் தீர்த்து வருகிறோம்.

இதுவரை 8 போர்களை தீர்த்துவிட்டேன். மேலும் இன்னொரு போரை தீர்க்க முயற்சி நடக்கிறது. அது ரஷ்யா-உக்ரைன் போர். அந்த போர் முடிவுக்கு வந்தால், நாங்கள் இறுதியில் அங்கு செல்வோம். போரில் ஏராளமான வீரர்கள் கொல்லப்பட்டனர். அதை நிறுத்த வேண்டும். அதனை நிறுத்த நாங்கள் மிகவும் கடினமாக உழைத்து வருகிறோம். இவ்வாறு அதிபர் டிரம்ப் கூறியுள்ளார

(ஐ)

## ஜெலன்ஸ்கியின் விமானப் பாதையை வேவு பார்த்த டிரோன்கள் குறிவைத்ததா ரஷ்யா?



அயர்லாந்து சென்ற உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியின் விமானப் பாதையை 5 டிரோன்கள் வேவு பார்த்ததாக அயர்லாந்தின் கடற்படை தெரிவித்துள்ளது.

நேட்டோ எனப்படும் சர்வதேச நாடுகளின் ராணுவ கூட்டமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, ரஷ்யா கடந்த 2022 பிப்ரவரியில் போரை துவங்கியது. முயற்சித்தது.


நான்கு ஆண்டுகளை நெருங்கும் இந்த போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க அதிபர் டிரம்ப் கடும் முயற்சிகளை மேற்கொண்டார். 28 அம்சங்களைக் கொண்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை முன்மொழிந்தும் போர் நின்றபாடில்லை. உக்ரைனின் முக்கிய நகரங்களை ரஷ்யா கேட்டுள்ளது. இதனால், இந்த ஒப்பந்தத்தில் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

இதனிடையே, அரசு முறை பயணமாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, விமானம் மூலமாக அயர்லாந்து சென்றிருந்தார். அப்போது, அவரது விமானப் பாதையை 5 டிரோன்கள் வேவு பார்த்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனை அயர்லாந்து கடற்படை உறுதி செய்துள்ளது.

விமானப் பாதையை இடைமறிக்கும் முயற்சியாக இந்த டிரோன்களை அனுப்பியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

கடந்த சில தினங்களாக ஐரோப்பா நாடுகளை டிரோன்கள் அச்சுறுத்தி வந்த நிலையில், இது ரஷ்யாவின் வேலையாகத்தான் இருக்கும் என்று உலக நாடுகளின் தலைவர்கள் குற்றம்சாட்டி வந்தனர். இந்த சூழலில், உக்ரைன் அதிபர் அயர்லாந்து சென்ற நிலையில், அங்கும் டிரோன்கள் மூலம் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)




## போதைப்பொருள் கடத்தல் கப்பலை தாக்கியது அமெரிக்க ராணுவம் 4 பேர் பலி

கிழக்கு பசிபிக் கடல் வழியாக போதைப்பொருள் கடத்தி வந்த கப்பல் மீது அமெரிக்க ராணுவம் தாக்குதல் நடத்தியதில் 4 பேர் கொல்லப்பட்டனர்.

வெனிசுலாவில் இருந்து பசிபிக் மற்றும் கரீபியன் கடல் வழியாக போதைப்பொருள் கடத்தும் சம்பவத்திற்கு எதிராக, 'ஆப்பரேஷன் சதர்ன் ஸ்பியர்' என்ற பெயரில் அதிபர் டிரம்ப் தலைமையிலான அமெரிக்கா அரசு நிர்வாகம் கடும் நடவடிக்கையை எடுத்து வருகிறது.

இந்த நிலையில், கிழக்கு பசிபிக் கடல் வழியாக கப்பலில் போதைப்பொருள் கடத்தி வருவதாக அமெரிக்க ராணுவத்திற்கு உளவுத்துறை மூலம் ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, கடல் பகுதியில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்ட ராணுவத்தினர், போதைப் பொருள் கடத்தி வந்த கப்பலை கண்டறிந்து தாக்குதலை நடத்தியது. இதில், கடத்தலில் ஈடுபட்ட 4 பேர் கொல்லப்பட்டனர்.

'ஆப்பரேஷன் சதர்ன் ஸ்பியர்' திட்டத்தின் கீழ், இந்தாண்டில் மட்டும் பசிபிக் மற்றும் கரீபியன் கடல் பகுதிகளில் போதைப்பொருள் கடத்தல் கப்பல்கள் மீது அமெரிக்க ராணுவம் 20 முறை தாக்குதல் நடத்தியுள்ளது. 80க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். (ஐ)

## பாகிஸ்தானில் 37 ஹிந்து கோவில்கள், குருத்வாராக்கள் மட்டுமே செயல்படுகின்றன: வெளியான அதிர்ச்சி தகவல்

*பாகிஸ்தானில் மொத்தமுள்ள 1817 ஹிந்து கோயில்கள் மற்றும் சீக்கிய வழிபாட்டு தலங்களில் 37 மட்டுமே செயல்பட்டு வருகிறது என அந்நாட்டு பார்லிமென்ட் குழு முன்பு தாக்கல் செய்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இது தொடர்பாக பாகிஸ்தான் சிறுபான்மையினர் பாதுகாப்பு குறித்த குழு தலைவர் டானேஷ்குமார் கூறியதாவது: சிறுபான்மையினர் பாதுகாப்புக்கு அரசியலமைப்பு அளித்த வாக்குறுதியை பார்லிமென்ட் குழுவானது நிறைவேற்ற வேண்டும். அரசியலமைப்பின் உறுதிமொழி நடைமுறைப்படுத்தப்படுவதற்கு பாகிஸ்தானிய சிறுபான்மையினர் தகுதி பெற்றுள்ளனர். அவர்களுக்கு நீதி மற்றும் சமத்தும் கிடைப்பதற்கான கொள்கை சீர்திருத்தங்களை செய்ய வேண்டும் எனக்கூறினார்.*

*ரமேஷ்குமார் வன்க்வானி என்ற எம்பி கூறியதாவது: சொத்து மீட்பு குழுவானது, தனது கட்டுப்பாட்டில் உள்ள கோவில்கள் மற்றும் குருத்வாராக்களை கவனிப்பதை கைவிட்டுவிட்டது. இந்த குழுவின் தலைமைப்பதவியை முஸ்லிம் அல்லாத நபரிடம் வழங்க வேண்டும். அப்போது தான் புறக்கணிக்கப்பட்ட மத சொத்துகளை மறுசீரமைத்து முறையாக பராமரிக்க முடியும்.*



*பாரம்பரிய சின்னங்களை பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த இடங்களானது, மதரீதியிலான முக்கியத்துவத்தை மட்டும் அல்லாமல், பாகிஸ்தானின் கடந்த கால கலாசார பெருமைகளை பறைசாற்றும் என்றார்.*

*கேசோ மால் கேல் தாஸ் என்ற எம்பி கூறுகையில், நாடு பிரிவினைக்கு பிறகு பெரும்பாலான கோவில்கள் மற்றும் குருத்வாராக்கள் கைவிடப்பட்டன. உள்ளூரில் வசித்த ஹிந்துக்கள் மற்றும் சீக்கியர்கள் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்துவிட்டனர் என்றார்.*

*பார்லிமென்ட் குழு முன்பு தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் கல்வித்துறையில் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும். வெறுப்பை தூண்டும் தகவல்கள் நீக்கப்படுவதுடன், சிறுபான்மையின மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்க வேண்டும். அவர்களுக்கான வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.(ஐ)*

## 13 மாவட்டங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆகிய மாவட்டங்களுக்கு முதலாம் நிலை எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்றும் நாட்டின் சில பகுதிகளில் மழை பெய்யக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணத்தின் சில பகுதிகளிலும், மாத்தளை மாவட்டத்திலும் மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும், காலி, மாத்தறை மாவட்டங்களிலும் சுமார் 75 மில்லிமீற்றர் வரையான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

## டித்வா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேரிடர் மீட்புக் குழுக்கள் பல நாட்களாகத் துண்டிக்கப்பட்ட பகுதிகளில் உடல்களை மீட்டு வருகின்றன. அதேநேரத்தில் தற்காலிக தங்குமிடங்களில் உள்ள குடும்பங்கள் பேரிடரின் போது அடித்துச் செல்லப்பட்ட அன்புக்குரியவர்களின் செய்திக்காக இன்னும் காத்திருக்கின்றனர்.

சில இடங்களில் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான அணுகல் வழங்கப்பட்டவுடன் அந்த இடங்களை பரிசீலனை செய்யவுள்ளதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## தையிட்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முடித்திருக்கும் நிலையில் தையிட்டி விகாரை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த நீதியும் இதுவரை கிட்டவில்லை.

நீதிகிட்டுவதற்கான எந்தவிதமான அறிகுறியும் இதுவரை தென்படவில்லை. ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் நீதி கேட்டு போராடுபவர்களை அச்சுறுத்துவதற்கு பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்துவதும் என்றுமில்லாதவாறு இம்மாதம் அடக்குமுறையை அவிழ்த்துவிட்டு அரசாங்கம் வேடிக்கை பார்ப்பதாகவே தோன்றுகிறது.

சட்டவிரோத விகாரை கட்டடத்தால் நிலமிழந்து பாதிக்கப்பட்டவரின் சார்பில் நின்று நீதி கேட்டு போராடுபவர்கள் கடந்த காலங்களிலும் பாதை ஓரத்தில் தற்காலிக கொட்டில் அமைத்து போராட்டம் நடாத்தி வந்திருக்கின்றனர்.

இந்த கொட்டிலால் எவருக்கும் எந்த விதமான பாதிப்பும் ஏற்படவில்லை. பொலிஸாரின் வாகனங்களும் ஏனையோரின் வாகனங்களும் அப் பாதை வழியே சென்று வந்திருக்கின்றன. இந்த தடவை அது மக்களுக்கும் வழிபாட்டுக்கு வருகின்றவர்களுக்கும் தடையாக இருக்கின்றது என்று அதனை பலவந்தமாக பொலிஸார் அகற்றியதோடு பெண்கள் மீதும் தாக்குதல் நடத்தியதை மனித உரிமைக்கு எதிரான செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம்.

தையிட்டி சட்டவிரோத விகாரை கட்டடத்திற்கு எதிரான அறப்போராட்டம் நீதி கிடைக்கும் வரை தொடரும்.

இதனை கட்சி அரசியலாக எவரும் கொச்சைப்படுத்தாது அரசியல் போராட்டமாக கருதி அனைத்து தரப்பினரும் ஆதரவளிக்குமாறு கூறுகின்றோம். அதனைவிடுத்து அமைதி காத்து இனப்படுகொலை ஆட்சியாளர்களுக்கு ஆதரவளிப்பது என்பது எம்மை நாமே அழித்து கொள்வதாக அமையும்.

மேலும் நாட்டின் சட்டம் அனைவருக்கும் சமம் என அடிக்கடி கூறும் தற்போதைய ஜனாதிபதி அதனை தனது அரசியலுக்காக மட்டும் பாவிக்காது லஞ்சம், ஊழல் என்பதற்கு மட்டும் கட்டுப்படுத்தாது இனங்களின் தனித்துவம், அவர்களின் அடையாள பாதுகாப்பு, அரசியல் உறுதி பாட்டு பாதுகாப்பு என்பதற்கும் பயன்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெள்ளப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைப்பு, அற்புதமான இதயம் அமைப்பு ஆகியவையால் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வில் உயிரிழந்தவர்களின் நினைவாக அகவணக்கம் செலுத்தப்பட்டு மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக நிவாரண பொருட்களும் சேர்க்கப்பட்டது.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது, நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமை குறித்து ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கருத்துக்களை வெளியிட்டனர்.

இந்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட சில எதிர்க்கட்சிகள் வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிப்பதைத் தவிர்க்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## போலி ஆவணங்களைத் தயாரித்த நபர் ஒருவர் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது!

தேசிய அடையாள அட்டைகள் முதலான போலி ஆவணங்களைத் தயாரித்த நபர் ஒருவர் இலஞ்ச அல்லது ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறை, கொரகபொல பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, 2023ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 124ஆம் பிரிவை மீறி செயற்பட்ட காரணத்தினால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைதான நபர் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அரச பேருந்துகளில் ரயில் மாதாந்த பருவச்சீட்டை பயன்படுத்த அனுமதி!

ரயில் மாதாந்த பருவச்சீட்டைக் கொண்டு இ.போ.ச பேருந்துகளில் பயணிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை அறிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமை காரணமாக இந்த சந்தர்ப்பம் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இலங்கை போக்குவரத்து சபையின் அதி சொகுசு பேருந்துகள் தவிர்ந்த ஏனைய சாதாரண பேருந்துகளில் ரயில் மாதாந்த பருவச்சீட்டைப் பயன்படுத்தி போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் பேருந்து ஊழியர்கள் மற்றும் குழுவினருக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 85% வீதம் பேருக்கு மின்சாரம் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது- இலங்கை மின்சார சபை!

நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலைமை காரணமாக துண்டிக்கப்பட்ட மின்சார இணைப்புகளில் சுமார் 85 சதவீதம் தற்போது மீண்டும் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் துணை பொது மேலாளர் நோயல் பிரியந்த இதனைத் தெரிவித்துள்ளார்.

அனர்த்த முகாமைத்துவ மையத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு முழுவதும் சுமார் 07 மில்லியன் மின்சார நுகர்வோர் இருப்பதாகவும், அவர்களில் 3.9 மில்லியன் பேருக்கான மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தற்போதைய நிலவரப்படி, இந்த நுகர்வோரில் சுமார் 85% வீதம் பேருக்கு மின்சாரம் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலைமையால் 16,771 மின்மாற்றிகள் செயலிழந்திருந்த நிலையில், அவற்றில் 14,549 மின்மாற்றிகள் ஏற்கனவே சரிசெய்யப்பட்டு மீட்டெடுக்கப்பட்டுள்ளன.

மீதமுள்ள மின் இணைப்புத் துண்டிப்புகள் விரைவில் சரிசெய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கைகளின் போது மின்சார ஊழியர் ஒருவர் தனது உயிரை இழந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு கோட்டையிலிருந்து நாத்தாண்டிய வரையிலான ரயில் சேவைகள் வழமைக்கு!

கொழும்பு கோட்டையிலிருந்து நாத்தாண்டிய வரை ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படும் என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலைமையால் புத்தளம் மார்க்கத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதனால் குறித்த பாதையிலான ரயில் போக்குவரத்து கொழும்பு கோட்டையிலிருந்து கொச்சிக்கடை ரயில் நிலையம் வரை மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

தற்போது புத்தளம் மார்க்கத்தில் கொச்சிக்கடை மற்றும் நாத்தாண்டிய ஆகிய பகுதிகளுக்கு இடையிலான சீரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளதால், கொழும்பு கோட்டையிலிருந்து நாத்தாண்டிய வரை ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படும் என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலைமையால் ரயில் பாதைகளுக்கு கடும் சேதங்கள் ஏற்பட்டது. எனினும் தற்போது சேதமடைந்த பல இடங்களில் மீண்டும் சீரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உங்களின் ...

உங்கள் கடந்த காலத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளாமல், மற்றவரிடம் சொல்லி, அவரிடம் இருந்து அங்கீகாரத்தை எதிர்பார்த்து, அவர் உங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைப்பது எந்த வகையில் சாத்தியம்?

அதுபோல உங்கள் கடந்த காலத்தைக் குறித்து, உங்களைக் குறித்து நீங்கள் குறைவாக மதிப்பிட்டுவிட்டு, அடுத்தவர் உங்களை நன்றாக மதிப்பிட வேண்டும் என்று எதிர்பார்த்தால் அது எப்படி நடக்கும்?

சரி, கடந்த காலம் போகட்டும். இப்போது இருக்கும் உங்களை உங்களுக்கு எந்த அளவு பிடித்திருக்கிறது? இப்போதும் அதே விமர்சனங்கள்தாம்.

உடல் எடை சிறிது குறைந்துவிட்டால் நன்றாக இருக்கும்.

தலையில் வழுக்கை மட்டும் விழாமல், முடி இருந்தால் நன்றாக இருக்கும். என்னைவிடத் தகுதி குறைந்தவர்கள் எல்லாம் லட்ச ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கிறார்கள். நானும் லட்ச ரூபாய்க்கு மேல் சம்பாதித்தால்தான் என்னால் நிம்மதியாக இருக்க முடியும்.

காதலை அவர் ஏற்றுக்கொண்டால் மட்டுமே என்னால் மகிழ்ச்சியாக இருக்க முடியும்.

மற்றவர்கள் உங்களை விமர்சிப்பது இருக்கட்டும். உங்களால் உங்கள் மேல் விமர்சனங்களை வைக்காமல் இருக்க முடிகிறதா?

நீங்கள் குண்டாக இருக்கிறீர்கள், உங்கள் தலை வழுக்கையாக இருக்கிறது, நீங்கள் குறைவாகச் சம்பாதிக்கிறீர்கள், அல்லது உங்களை ஒருவரும் காதலிக்கப் போவதில்லை என்பது உலகம் உங்கள் மேல் வைக்கும் விமர்சனங்கள் அல்ல. நன்றாக யோசியுங்கள். இவை அனைத்தும் நீங்கள் உங்கள் மேல் வைக்கும் விமர்சனங்கள்தாம்.

பொதுவாக ஒருவருடன் நாம் நல்ல உறவில் இருந்தால், அவரை நமக்கு மிகவும் பிடிக்கும். அவரை அப்படியே ஏற்றுக்கொள்வோம். மாற வேண்டும் என்று நிர்பந்திப்பது இல்லை. அவர் மீது விமர்சனங்கள் வைப்பதில்லை.

எனவே முதலில் நம்முடனான உறவைச் சரிப்படுத்திக்கொள்வோம். நம்மை நாம் அப்படியே ஏற்றுக்கொள்வோம். மாற்றக்கூடிய விஷயங்களை நல்லவிதத்தில் சொல்லிப் பழகுவோம்.

எடுத்துக்காட்டாக, நான் இப்போது சிறிது எடை கூடுதலாக உள்ளேன், அதனால் என்ன தேவைப்பட்டால், நான் குறைத்துக் கொள்ளலாம். நான் இப்போது இவ்வளவு சம்பாதித்துக்கொண்டு இருக்கிறேன், அதனால் என்ன இன்னும் நிறைய சம்பாதிக்கலாம். நான் எல்லாரையும் நேசிக்கிறேன் எல்லாரும் என்னை நேசிக்கிறார்கள் என மாற்றிச் சொல்லலாம்.

முதலில் உங்களைக் கொண்டாட பழகுங்கள். உங்களைக் கொண்டாட ஆரம்பியுங்கள். அதற்கான முதற்படிதான் உங்கள் மீதுள்ள விமர்சனங்களைக் கைவிடுவது. முடிந்த அளவுக்கு உங்களை நீங்களே பாராட்டிக்கொள்ளுங்கள். கடந்த காலத்தை எந்த விமர்சனமும் இல்லாமல் கடந்துவிட்ட ஒன்றாக மட்டும் பாருங்கள். நீங்கள் நீங்களாக இருப்பதில் மகிழ்ச்சியாக இருங்கள்.

முதலில் நமக்கும் நமக்குமான உறவை நன்றாக அமைத்துக்கொள்ளலாம். இந்த முதன்மையான உறவு சரியாக இருக்கும் பட்சத்தில், சுற்றியிருக்கும் உறவுகளும் சரியாகவே அமையும்.

எந்தச் சூழ்நிலையாக இருந்தாலும் சரி, விமர்சனங்கள் எதுவுமில்லாமல், உங்களுக்காகத் துணைநிற்கும் முதல் ஆளாக இருங்கள். ஏனென்றால், உங்கள் இறுதிமூச்சு வரை உங்களுடன் பயணிக்கப் போகும் நபரும் நீங்கள்தான்.

விமர்சனங்கள் எதுவும் இல்லாமல், நம்மை நாம் ஏற்றுக்கொள்வதன் மூலம் முதன்மையானதும், முக்கியமானதுமான, நமக்கும் நமக்குமான உறவைச் சரிசெய்துகொள்வோம். இந்த நொடிவரை வாழ்வின் சவால்களைச் சமாளித்து, எந்தத் தருணத்திலும் கைவிடாமல் (பளைந ரி) வாழ்ந்துவரும் உங்களைக்கொண்டாடுங்கள்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08. Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.12.2025 வெளியிடப்பெற்றது.